**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 28.10.2025**
**OS. No. 180/2021**
**வழக்கு சாட்சி PW.1–சின்னபொண்ணு , க/பெ. ரத்தினம்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) தாவா சொத்தில் எனக்கு பங்கு வேண்டும் என்றும், சொத்தை பிரதிவாதிகள் விற்ககூடாது என்றும் பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நானும், 2ம் வாதியான என் மகள் கற்பகமும் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நானும், 2ம் வாதியும் ஒரே வீட்டில் தான் உள்ளோமா என்றால் ஆமாம். 2ம் வாதி மல்லிகுந்தம் கிராமத்தில் குடியிருப்பதாக பிராதில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான், நானும் அங்கு தான் உள்ளேன். வழக்கல் எங்கள் இருவருக்கும் தனித்தனியாக பாகம் வேண்டும் என்று கேட்டுள்ளோம் என்றால் சரிதான். இருவரும் தனிதனியாக பாகம் வேண்டும் என்று கேட்டால் தனித்தனியாக நீதிமன்ற கட்டணம் செலுத்தவேண்டும் என்றும், இருவரும் சேர்ந்து ஒரே நீதிமன்ற கட்டணம் கட்டி தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

2) தாவா சொத்து எங்கள் பூர்வீக சொத்தா அல்லது என் கணவரின் சுய சம்பாத்திய சொத்தா என்றால் என் கணவரும், என் மச்சான்டாரர்களும் சேர்ந்து வாங்கிய சொத்து ஆகும். அவர்களது சுய சம்பாத்திய சொத்து என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்தின் கிரைய பத்திரத்தில் என் கணவரை மைனராக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, அந்த சொத்து வாங்கும் போது அவருக்கு 35 வயது இருக்கும். தாவா சொத்தை எனக்கும், என் கணவருக்கும் திருமணம் ஆவதற்கு முன்பே கிரையம் வாங்கிவிட்டார்களா என்றால் ஆமாம். என் பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்து என் கணவரின் ஆதி சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3) தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் மொத்தம் 45 சென்ட் ஆகும். தாவா பிராதில் வழக்கு சொத்தாக 45 சென்ட், மற்றும் 5 சென்ட் நிலம் என்று பிரித்து

காண்பித்துள்ளோம் என்றால் எனக்கு தெரியவில்லை. மேற்கண்ட இரண்டு நிலங்களுக்கு இடையே எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்தின் சக்குபந்தி விவரம் தெரியுமா என்றால் தெரியவில்லை. தாவா சொத்தானது தற்போது பிரதிவாதிகள் வீடு கட்டி வசித்து வருகிறார்கள். அதில் நாங்களும் ஒரு 3 சென்ட் நிலத்தில் வீடு கட்டியுள்ளோம். தாவா சொத்தில் மெத்தை வீடு ஒன்று, வில்லை வீடு ஒன்று, நான் கட்டிய அட்டை வீடு ஒன்றும் பிரதிவாதி வீடுகளில் மாட்டு கொட்டகை ஒன்றும் உள்ளது. மேற்கண்ட மெத்தை வீடு எத்தனை வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. அதன் மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியவில்லை.

4) தாவா சொத்தில் நான் கட்டிய வீடு மூன்று வருடத்திற்கு முன்பு கட்டினேன். அதற்கு சுமார் ரூ.8 லட்சம் செலவானது. நான் கட்டிய வீட்டை விட பிரதிவாதிகள் கட்டிய வீட்டின் மதிப்பு சுமார் 2 பங்கு அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். அத்தனை சொத்துக்களையும் தாவாசொத்தாக காண்பிக்காமல் நிலத்தை மட்டும் காண்பித்து, தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. உண்மையான சொத்துக்களை குறிப்பிட்டு தாக்கல் செய்திருந்தால் தாவா வழக்கானது நீதிமன்றத்தில் ஆள்வரம்பிற்குள் வராது என்றால் சரியல்ல. சுமார் 30 வருடங்களுக்கு முன்பே என் கணவருக்கும், எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்ட அவரவர்கள் அவரவர்கள் நிலத்தில் அனுபவத்தில் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல, பாகம் எதுவும் பிரிக்கவில்லை. தவறான சங்கதிகளை சொல்லி, உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.